**O.S. No. : 100/2020**

Dated: 09.07.2026

**பி.வா.சா.1: விக்னேஷ் ;  த/பெ. ராஜன்**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. எனது தகப்பனார் இந்த வழக்கில் முதல் பிரதிவாதி என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு இந்த வழக்கின் விவரங்கள் நன்றாக தெரியும் என்றால் சரிதான். எனது தகப்பனார் ஏன் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் அவருக்கு உடல்நிலை சரியில்லை. அவ்வாறு எனது தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லை என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

2. எனது தகப்பனாரை விசாரித்தால் அவர் உண்மையை கூறிவிடுவார் என்பதால்தான் அவரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுதப்படிக்க தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். எனக்கு இந்த வழக்கின் விவரங்கள் நன்றாக தெரியுமா என்றால் தெரியும். வாதி எதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதியின் வீட்டினை ஒட்டி அரசு கழிவுநீர் கால்வாய் உள்ளது, அதை தாண்டி நான் கட்டியுள்ள கட்டிடம் உள்ள இடம் தனக்கு சொந்தமானது என்று வாதி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

3. நான் தற்போது கூறியுள்ள விவரத்தை எனது எதிர்வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். வழக்கு சொத்தின் பழைய சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் புதிய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும், புதிய சர்வே எண் 571/3 ஆகும். தாவா சொத்தின் புதிய சர்வே எண்கள் 931/1, 2, 3 மற்றும் 4 என்பதுதான் சரி என்றால் சரிதான்.

4. தாவா சொத்து குறித்து வாதிக்கு வழங்கப்பட்டுள்ள பட்டாவின் எண் 385 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் வீடு மற்றும் தாவா சொத்து ஆகியவை வருவாய் நிலங்கள் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் நஞ்சா கவுடர் என்பவருக்கு வழங்கப்பட்ட பட்டா என்றால் சரிதான்.

5. நஞ்சா கவுடருக்கு மேற்படி பட்டாவின் அடிப்படையில் 2.96 ஹெக்டேர் அளவுள்ள பூமிக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள மேற்படி பட்டாவில் கூறப்பட்டுள்ள பூமியில் நுழைய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல, நான் கட்டிடம் கட்டியுள்ள பூமிக்கும், இந்த பட்டாவில் கண்டுள்ள பூமிக்கும் தொடர்பில்லை. வாதியின் தகப்பனார் நஞ்சா கவுடர் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும்.

6. தாவா பூமிக்கு நஞ்சா கவுடர் பெயரில் பட்டா வழங்குவதற்கு முன்பே அவர் அந்த பூமியில் கதவு எண் 6/109 மற்றும் 6/109A என்ற எண்கள் கொண்ட வீடு கட்டி அந்த பூமியில் குடியிருந்து வந்தார் என்றால், கதவு எண் பற்றி எனக்கு தெரியாது, ஆனால் நஞ்சா கவுடர் வீடு கட்டி குடியிருந்த விவரம் எனக்கு தெரியும். மேற்படி வீட்டினை பின்னிட்டு நான்கு பாகங்களாக பிரித்து கதவு எண் 6/89, 6/90, 6/91 மற்றும் 6/92–ல் நஞ்சா கவுடரின் வாரிசுகள் குடியிருந்து வந்தார்கள் என்றால், கதவு எண் பற்றி எனக்கு சரியாக தெரியாது, ஆனால் நஞ்சா கவுடரின் வாரிசுகள் அந்த வீட்டில் குடியிருந்து வந்தார்கள் என்பது சரிதான்.

7. தற்போது என்னிடம் காட்டப்படும் **வா.சா.ஆ.2** வீட்டு வரி ரசீதின் அடிப்படையில் நஞ்சா கவுடர் கதவு எண் **6/89**–ற்கு வீட்டு வரி செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் **வா.சா.ஆ.3** வீட்டு வரி ரசீதின் அடிப்படையில் நஞ்சா கவுடர் கதவு எண் **6/90**–ற்கு வீட்டு வரி செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் **வா.சா.ஆ.4** வீட்டு வரி ரசீதின் அடிப்படையில் நஞ்சா கவுடர் கதவு எண் **6/91**–ற்கு வீட்டு வரி செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் **வா.சா.ஆ.5** வீட்டு வரி ரசீதின் அடிப்படையில் நஞ்சா கவுடர் கதவு எண் **6/92**–ற்கு வீட்டு வரி செலுத்தியுள்ளார் என்றால் சரிதான்.

8. நஞ்சா கவுடர் 2010 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 வீட்டு வரி ரசீதின் அடிப்படையில் வாதி ராஜேந்திரன் கதவு எண் 6/89–ற்கு வீட்டு வரி செலுத்தியுள்ளார் என்றால் சரிதான், அவர் 2019 மற்றும் 2020 காலத்திற்கு வீட்டு வரி கட்டியுள்ளார். வாதியின் வீட்டிற்கு அருகில் அவரது மூத்த சகோதரர் ஹரிதாஸ் என்பவர் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி ஹரிதாஸ் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் 6/90 என்றால் சரிதான்.

9. கதவு எண் 6/91 கொண்ட வீட்டில் வாதியின் தம்பி சிவக்குமார் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். கதவு எண் 6/92 கொண்ட வீட்டிற்கு வாதியின் அண்ணன் ராமகிருஷ்ணன் வீட்டு வரி செலுத்தியுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அந்த வீடு காலியாகத்தான் உள்ளது. மேற்படி வாதியின் அண்ணன் ராமகிருஷ்ணன் ஊட்டியில் தனியாக வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் அவர் ஊட்டியில் குடியிருந்து வருகிறார் என்பது சரிதான், ஆனால் அவர் தனியாக வீடு கட்டியுள்ளாரா என்பது பற்றி எனக்கு தெரியாது.

10. நான் குடியிருக்கும் வீட்டிற்கு பட்டா யார் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் எனது தாத்தா பெள்ளி கவுடர் என்பவர் பெயரில்

வழங்கப்பட்டுள்ளது. என்னால் அந்த பட்டாவினை இந்த வழக்கில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எனது தாத்தாவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஆறு வாரிசுகள் ஆகும், அவர்களில் இரண்டு நபர்கள் தற்போது உயிருடன் இல்லை. அந்த வாரிசுகள் யார் யார் என்றால் 1. ராஜன், 2. மல்லிகா (எ) இந்திரா, 3. சரஸ்வதி, 4. பார்வதி, 5. புத்தி மற்றும் 6. தேவி ஆகும்.

11. எனது தாத்தா பெயரில் உள்ள பட்டா பூமிக்கு வாரிசுகள் அனைவருக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான், ஆனால் எனது தாத்தா அந்த சொத்தினை எனது அப்பா பெயருக்கு உயில் எழுதிக்கொடுத்துவிட்டார். அவ்வாறு எனது தாத்தா எனது அப்பா பெயருக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. அவ்வாறு எவ்விதமான உயிலும் எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

12. எனது அத்தை இந்திரா தற்போது எங்கு வசித்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அத்தை இந்திராவை நானும், எனது தகப்பனாரும் அடித்து காயப்படுத்திவிட்டதாக தேனாடுகோம்பை காவல் நிலையத்தில் ஒரு வழக்கு பதியப்பட்டது என்றால் சரிதான், அது பொய் வழக்காகும், அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

13. எனது தாத்தாவிற்கு வழங்கப்பட்ட பட்டாவானது வீட்டிற்கு மட்டும்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அது வீட்டுமனை பட்டா ஆகும், நாங்கள் அந்த நிலத்தின் அனுபோகத்தில் இருந்து வருகிறோம். எனது தாத்தாவிற்கு எத்தனை சென்ட் பூமிக்கு பட்டா வழங்கப்பட்டது என்பது குறித்து என்னால் கூற இயலாது என்றால் சரியல்ல, எனது தாத்தாவிற்கு 3 சென்ட் பூமிக்கு பட்டா வழங்கப்பட்டது. எனது தாத்தாவிற்கு 3 சென்ட் பூமிக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதை காண்பிக்க இந்த வழக்கில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், **(சாட்சி மீண்டும் மாற்றி தனக்கு சரியாக ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறார்).**

14. எனது தாத்தாவிற்கு வழங்கப்பட்ட பட்டா தற்போது யாரிடம் உள்ளது என்றால் எனது அப்பாவிடம் உள்ளது. தாவா வீட்டிற்கு பின்பு கேரி எனப்படும் காலி இடம் உள்ளது என்றால் சரியல்ல, வாதியின் வீட்டிற்கு பின்பு அரசு கழிவுநீர் கால்வாய்தான் உள்ளது, அந்த கழிவுநீர் கால்வாயை ஒட்டி 10 அடி உயரத்தில் எங்கள் வீட்டின் கேரி உள்ளது. அந்த எங்கள் வீட்டு கேரி இடத்திற்கு பட்டா உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை, ஆனால் அந்த கேரி அமைந்துள்ள பூமி எங்கள் அனுபோகத்தில் உள்ளது.

15. அவ்வாறு எனது வீட்டிற்கு அருகில் உள்ள கேரி பூமியானது எங்களது அனுபோகத்தில் உள்ளது என்பதை காண்பிக்க ஆவணம் ஏதாவது இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. அவ்வாறு நான் கூறுவதுபோல அந்த கேரி பூமி எங்களது தனிப்பட்ட அனுபோகத்தில் இல்லை என்றால் சரியல்ல, எங்களது அனுபோகத்தில்தான் உள்ளது.

16. இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையானது நாங்கள் கூறிய விவரங்களின் அடிப்படையில்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை பத்தி–7–ல் அரசாங்கத்தால் தடுப்பு சுவர் கட்டிக்கொடுக்கப்பட்டதாக கூறியுள்ளோம் என்றால் சரிதான், அரசாங்கத்தால் தடுப்பு சுவரானது பாதி அளவிற்கு கட்டிக்கொடுக்கப்பட்டது, மண் சரிவு ஏற்பட்டதால் பாதுகாப்பு கருதி அந்த தடுப்பு சுவரை நாங்கள் மேலும் உயர்த்தி கட்டி முடித்துள்ளோம்.

17. அவ்வாறு நாங்கள் தடுப்பு சுவரை கட்டி முடித்துவிட்டோம் என்பதை காண்பிக்க இந்த வழக்கில் ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளோமா என்றால் அது பற்றி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

**(வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2026.07.09 18:05:29 +0530